www.tamilarangam.net

# பெண்கள் செய்தி மடல்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 7:2 ஆனி 2005


* சுனாமி அனர்த்தத்தின் பின்னர்....
* சூரியா நூலகம்....
* வீடு போகத் தடை விதியாதே....
* மீண்டும் பன் வயல்கள்....
* பரிதவிக்கும் பாலையடி....
* அக்கரை, கரை சேர்க்குமா....
* தை -சித்திரைவரை....
* கடலே....


**இழந்தது இறுதியாக**

**எழுவது உறுதியாக**

**என்பதே சபதமாக**

**வரும் வருடத்தை**

**எதிர்கொள்வோம்**

*ஆசிரியை*

## சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் - கிழக்கு மாகாணம் -



"எரியும் பிரச்சினைகள் இன்னும் எரிந்து கொண்டேதான் உள்ளது. எரிந்தது போக மிகுதிச் சாம்பலாய் மனிதர்கள் தான் கிடைப்பார்களோ"

26.12.2004 அன்று ஏற்பட்ட அனர்த்தத்தின் பின் வீடு வாசல்களை இழந்த மக்கள் முகாம் வாழ்க்கையை வாழ வேண்டி ஏற்பட்டது. அத் தருணத்தில் நிவாரணங் களையும் விட அதிகமாக குவிக்கப்பட்டது, அரசு தரப்பால் வழங்கிய வாக்கு றுதிகளும், அனுதாபங்களைத் தெரிவிக்க முண்டியடித் தோரும்....

"பாதிக்கப்பட்ட மக்கள் இலங்கையில் எம் மூலை முடுக்குகளில் இருந்தாலும் அவர்களுக்கான நஷ்டஈடுகள், கொடுப்பனவுகள், பாதுகாப்பான பலம் பொருந்திய வீடுகள், சுகாதார வசதிகள், அடிப்படை வசதிகள்....இன்னும்.... இன்னும் இழுத்தடிப்பின்றி விரைவில் நிறைவேற்றப்படும்".

இவ் வாக்குறுதிகள் கரைந்து கரைந்து.... குட்டிச் சுவராக, மக்கள் ஒதுங்க இடமின்றி இன்னும் முகாம்களுக்குள் முனகுவதும்... அவர்கள் உரிமைகளை அரசே மறந்திருப்பதும்....

முகாம் வாழ்க்கைக்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் தமக்கான இருப்பிடங்களை இழுத்தடிப்பில்லாமல் பெற்றுக்கொள்ள அதற்கான போராட்டங்கள் என்று, இன்று ஒன்று மாற்றி ஒன்றாய் உணவு, உடை, உறையுள் என மக்கள் போராட்டம் தொடர்கிறது.

மக்களின் போராட்டங்களுக்கு பதில் சொல்ல வேண்டியவர்களாய் அரச அதிகாரிகள் உள்ளனர். இலங்கையின் கரையோரப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுடன் இவர்கள் தம் பதில்களை பகிரவேண்டி உள்ளது.

இன்று இம் மக்களுக்காக சேவை செய்யும் பல அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மக்களின் பிரதிநிதிகளாக பல கேள்விகளை, அழுத்தங்களை அரசை நோக்கி முன்வைக்கின்றது. அந்தவகையில் 10.06.2005 அன்று "சுவாட்" அமைப்பின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்டத்தில் "சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்" ஒன்று நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் கொழும்பு, ஹம்பாந் தோட்டை, ஹிக்கடுவ, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரச தரப்பிலான பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் போன்றோர் கலந்துகொண்டனர்.

*"மக்களின் பாதுகாப்பிற்காக" என்று அரசு, கடலில் இருந்து 100m, 200m தூரத்திற்கு அப்பால்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களின் வாழ்விடங்களை வரையறுத்துள்ளது. ஆனால் 200m தூரத்திற்குட்பட்ட புகையிரத, போக்குவரத்துப் பாதைகள் புணரமைக்கப்படுகின்றன. இப்பாதைகளில் செல்வோர் யார்?

எதற்காக தொழிலிடமும் வாழ்விடமுமான காணிகள் மாற்றப்படுகின்றன? சுற்றுலா துறைக்காக இக்காணிகள் பயன்படுத்தப்படுமோ எனும் விசனத்திற்கு, பதில்....?

பிள்ளைகளின் பாடசாலைக் காணிகள் மாற்றப்படுகின்றன.....? அரசு காட்டிய இருப்பிட இடங்களுக்கும் பிள்ளைகளின் பாடசாலைக்கும் இடையேயுள்ள அதிக தூரத்தை சுருக்கிக் கொடுப்பது யார்....? பிள்ளைகளின் பாடசாலை வரவை அதிகரிப்பது எப்படி....?

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க அரசு தீர்மானித்து இடையே தொங்கும் 5000/= நிவாரணப் பணத்திற்கான முடிவென்ன?..., நிவாரணத்திற்காய் அலைவதா...?, தொழில் தேடி அலைவதா...?

காயப்பட்டவர்கள் இன்னும் பதிவு செய்யப்படவில்லை, இறப்பை உறுதி செய்ய முடியாத நிலமை...? இடம்மாறித் திரியும் பிள்ளைகளை தேடிக் கண்டுபிடிக்கும் அரசின் திட்டம் என்ன...? இடம் பெயர்க்கப்பட்ட மக்களுக்கான புதிய காணிகள் யார் பெயரில் வழங்கப்படும்....?

இதற்குள்ளும் தொடரும் இராணுவ கெடுபிடிகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது....? ஆசிரியர்களின் மனநிலை பற்றி அக்கறைகொள்வது யார்...?, அரச நிவாரண உணவுகளில் சுகாதாரத் தன்மை பேணப்படுகிறதா...? மக்களின் மதம், மொழி, கலாசாரம் போன்றவற்றின் உரிமைகள், மீறாமல் பாதுகாக்கப்படுகின்றதா....?,

காணிக்காக, அரச கேட்கும் உறுதிப் பத்திரங்களை சமர்ப்பிக்க முடியாதவர்களின், வாடகை வீடுகளில், இல்லங்களில் வாழ்ந்தவர்களின் நிலை என்ன....?

இரு குடும்பத்திற்கு ஒரு வீடு எனும் மனித உரிமை மீறல்கள் நடைபெறும் சில இடங்களை கண்காணிப்பது யார்...?

பாதிக்கப்பட்ட மக்களின் தன்மான அவஸ்தைகள் மனித உரிமை மீறலாக கண்டு கொள்வது யார்....?

கொதித்தெழுந்த நெஞ்சங்களுடன் அங்கு பகிரப்பட்ட இவ்வாறான வினாக்களுக்கான விடைகளை காலம்தான் விரைவில் கொண்டுவருமோ.... அல்லது எரிவது .... அனைத்து விடைகள் சாம்பலாக மிஞ்சுவதோ கேள்விகளோ...?



தெருவோரம் திரிவோரை கொஞ்சம் திரும்பிப் பாருங்கோ
தேடி அலையும் சிறுவரை என்னென்று கேளுங்கோ
மனக்கவலை தீர வழி என்ன சொல்லுங்கோ
மண்ணில் பிறந்தோருக்கு மருந்து என்ன கூறுங்கோ

கே. ரஞ்சிதமலர்

## சூரியா நூலகம்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் ஒரு நூல் நிலையம் உண்டு. இங்கு பெண்கள் தொடர்பானவையும், ஏனைய சமூக விஞ்ஞானம் தொடர்பான நூல்களும் உள்ளன. அத்துடன் பெரும்பாலும் பெண்கள் எழுதிய நாவல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள், கவிதைத் தொகுதிகள் ஆகியவற்றையும் சூரியா நூலகம் சேகரித்து வைத்துள்ளது. பெண்கள் சம்பந்தமான சஞ்சிகைகளும் சமகாலத் தகவல்களைக் கொண்ட பிரசுரங்களும் சூரியா நூல் நிலையத்தில் உள்ளன. இவை தவிர தமிழ், ஆங்கில தினசரிப் பத்திரிகைகளையும் நூல் நிலையம் தருவிக்கின்றது. சாதாரண வாசகரிலிருந்து சமூக விஞ்ஞான துறைகள், பெண்ணியல் ஆய்வுகள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர், ஆய்வாளர் வரை பலருக்கும் இங்குள்ள நூல்களும், ஆவணங்களும் பயன்படக்கூடியவை. பெண்கள் தொடர்பான விபரண வீடியோப்படங்கள், ஒலிப்திவு நாடாக்கள் ஆகியவையும் உள்ளன.

இந்நூல் நிலையம் வியாழன், வெள்ளி, பூரணை தினம் தவிர்ந்த வாரநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 5.00 மணிவரை திறந்திருக்கும். அத்துடன் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9.00 மணிலிருந்து பி.ப 5.00 மணிவரை திறந்திருக்கும்.

நூலகத்தைப் பயன்படுத்துவதற்குக் கட்டணங்கள் ஏதுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வீடு போகத் தடை விதியாதே

- குடி மக்கள் பேரணி -







அனர்த்தம் பின்னாலே
ஆண்டவனே முன்னாலே

நூறும் வேண்டாம்
இருநூறும் வேண்டாம்
ஆறும் கடலும்
அருகில் வேண்டும்

கடல் அழித்தது - அது
முடிந்த கதை
நாங்கள் வாழ வேண்டும் - இது
புதுக்கதை

ஆறு எங்கள் சோறு
கடல் எங்கள் வாழ்வு

தூரத் தள்ளாதே
துரோகம் செய்யாதே

மாரி வருகுது
கூரை தா...?

ஊதிச் சங்கை கெடுக்காதே
ஊரின் குரலை மறுக்காதே

திராய் மடு வேண்டாம்
சொந்த இடம் வேண்டும்

இவ் வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் குடி மக்கள் பேரணி ஒன்று அண்மையில் இடம்பெற்றது. கடலை, ஆற்றை அண்டி வாழ்ந்த டச்பார், வேலூர் கொலணி, கல்லடி திருச்செந்தூர். புதுமுகத்துவாரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த குடி மக்களின் இவ் ஆர்ப்பாட்டப் பேரணி கல்லடியில் தொடங்கி மட்டக்களப்பு பிரதேச செயலகம் வரை இடம் பெற்றது. இம் மக்களின் ஜீவனோபாயத் தொழில் மீன்பிடி. ஆனால் இன்று இவர்கள் வாழ்விடங்கள் திராய்மடுவிற்கு மாற்றப்படுவதால் இவர்கள் தொழில் ரீதியாகவும், பிள்ளைகளின் கல்வி ரீதியாகவும் பல பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்

இவர்கள் தாம் வாழ்ந்த மண்ணில் தமது சூழலில் தமது அயலவருடன் மீண்டும் பாதுகாப்பாக தம் பழைய இடத்தில் தம் வாழ்வை கட்டியெழுப்பவே விரும்புகின்றனர்

---

## மீண்டும் பன்வயல்கள்



எமது கிராமப் பகுதி பெண்களின் பிரதான தொழில்களாக அமைவது சிறு கைத்தொழில்களாகும். வீட்டுத் தோட்டம், பாய் பின்னுதல், மீன் கூடு இழைத்தல், கைப்பணிப் பொருட்கள் செய்தல் போன்ற சிறு கைத் தொழில்களில் இவர்கள் பிரதானமாக ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு சிறு கைத்தொழிலில் ஈடுபடும் பெண்களுடன் ஏனையை பெண்களையும் இணைத்து சங்கங்களை உருவாக்கி இவர்களுக்கு சுய பாதுகாப்பு, சுயதொழில், சேமிப்பு, பால்நிலை சமத்துவம், சுகாதாரம், கல்வி போன்ற பல விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறைகளை நடத்தி இப்பெண்களின் வலுவூட்டலுக்கூடாக கிராம அபிவிருத்தியை ஏற்படுத்தி பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அற்ற சமாதான சமத்துவ சமதாயத்தை உருவாக்குவதற்காய் செயற்பட்டு வருகின்றோம்.

பூநொச்சிமுனை, நாவற்குடா, ஆரையம்பதி, காங்கேயநோடை, முறக்கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில் இவ்வாறான பெண்கள் சங்கங்கள் உள்ளன.

அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை இப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களின் சுய தொழிலில் பாரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. பூநொச்சிமுனை பெண்களின் பிரதான தொழிலாய் இருந்த பன் பயிர்ச்செய்கை முற்றாக அழிந்தது. மீள்குடியேற்றத்தின் பொருட்டு ஏற்பட்ட காடழிப்பின் போது (தாழங்குடா, மன்முனை) மீன் கூடு இழைக்கும் ஈச்சம் பிரம்பு பற்றைகள் எரியூட்டப்பட்டன. பனைமரங்கள் அழிக்கப்பட்டன. இவ்வாறு பெண்கள் தமது சிறுகைத் தொழிலுக்குரிய மூலப் பொருட்களை இழந்தனர்.

ஆகவே மீண்டும் நாம் அவர்கள் சுயதொழிலை கட்டியெழுப்ப வேண்டியவர்களாய் உள்ளோம். அந்த வகையில் பூநொச்சிமுனைப் பெண்களின் பன் பயிர்ச் செய்கையை மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளோம். பன் வயல்களை துப்பரவு செய்தல், பன்பயிர்களை நடல், வேலி அடைத்தல், பன் பதனிட தேவையான உபகரணங்கள் வழங்கல் போன்ற நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டு வருகிறோம்.



நீண்டகாலமாக இத்தொழிலில் ஈடுபட்டு வரும் யூ.எல்.சுலைமாநாச்சியை நாம் சந்தித்த போது பின்வருமாறு தன்னைப் பற்றியும், தம் ஊரைப் பற்றியும், தம் தொழிலைப் பற்றியும் எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

"நாங்க இங்கு வரும்போது 15 குடும்பந்தான் பூநொச்சிமுனையில குடியிருந்தாங்க. ஆனா அதுக்கு முந்தியே இங்க பெரிய ஒரு குடியிருப்பு இருந்துள்ளது. அந்தக் காலத்திலயும் இந்த அலைமாதிரி இல்லாம இதைவிட பெரிய அல ஒன்று வந்ததாம். அதுக்குப் பயந்து அந்த அலையில மிஞ்சின ஆக்கள் எல்லாம் வேற வேற இடத்துக்கு சென்றுத்தாங்களாம். இது எங்கட முத்தம்மாட வாப்பாட காலத்துக்கு முந்தி நடந்ததாம். நாங்க இங்க குடி வந்து கிணத்துக்கு மண் தோண்டும் போது சிப்பி, சங்கு, கெட்டுகால் போல பல கடல் சாமான்கள் வந்தது. அதப்பத்தி முத்தம்மாட்ட கேட்ட போதுதான் இந்த வரலாறு எங்களுக்கு தெரியவந்தது. நாங்க இங்க வந்த போது தமிழ், முஸ்லிம் என்ற வேற்றுப் புறிப்பில்லாம ஒற்றுமையாக அருகருகாக வாழ்ந்தம். அவங்க ஆக்கிறது எங்களிடமும், நாங்க சமைக்கிறது அவங்களுக்கும் கொடுத்து ஒற்றுமையாக இருந்தம்.

அப்ப இந்த ஏரியாவ சுத்தியிருந்தது தாளங்காடு, தண்ணீர் ஓடை எல்லாம். பிரதான தொழிலாக பாயிழைத்தல் இருந்தாலும் கோழி, ஆடு வளர்தல், கிடுகு பின்னல் போன்ற தொழில்களை பெண்கள் செய்ய ஆண்கள் கடலுக்கு போவாங்க.

இந்தப் பன் குட்டிகளை ஆயித்திய மலையில இருந்துதான் கொண்டு வந்து இங்க நாட்டி உருவாக்கியதாக சொல்வாங்க. இந்தப் பன் பயிரை சந்துப் பூச்சி தாக்கும். டி.டி.ரி. பவுடர் தெளிச்சா சரி. பெட்டி, தட்டு, தொப்பி, பாய், பை என்று பன்னில பலவிதமான பொருட்கள் செய்வம். எல்லா இடத்துலயும் இருந்து இங்கதான் வருவாங்க. அவ்வளவு கிராக்கி.

பாயிலையும்; கட்டில்பாய், சோத்துப்பாய், தொட்டில்பாய், மாப்பிள பாய், கரிகுருவிப்பாய், கைமாறிப்பாய், முறிச்சபாய் என்று பலவிதமான பாய்கள் பின்னுவம். போன வருசம் அல வரும்போது பன் அறுவடைக் காலம், பன் வெட்டினாப்போலயும், வரம்புல வெட்டிப் பரவின போலயும் எல்லோரும் இருந்தம். ஒரு பிடி பன்கூட எடுக்க முடியல்ல. மொத்தமா.... 17 குடும்பத்துல.... பன்வயல் இருந்தது. அவ்வளவையும் அள்ளிக்கொண்டு போனதுதான். இப்ப தொழிலை திரும்பவும் தொடங்கித்தம். எங்களோட நீங்களும் இந்த முயற்சியில இறங்கி உதவுவதால பழைய நிலமையை விட இந்த தொழில் எங்கள இன்னும் நல்லாக் கொண்டு வரும் என்று நம்புறம்".





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பரிதவிக்கும் பாலையடித்தோனா

கால் புதையும் சொர சொரத்த மணல். காலை 11 மணி. கடலில் இருந்து வீசத் தொடங்கிய அனல் காற்று காடுகளில் புழுதிக் காற்றாகி நீண்ட அந்த கிறவல் சாலையில் ஏறி கிறவல்களை சுழட்டி அள்ளி, முகத்தில் பலத்த காற்றாய் மோதியது. கண்களைக் கசக்கி இடுக்கியபடி 55 குடும்பங்கள் வாழும் பாலையடித்தோனா தற்காலிக இருப்பிடங்களை நோக்கி சென்றுகொண்டிருந்தோம்.

ஆளைத் தூக்கிச் செல்லும் அந்த அனல் காற்றை போட்டி போட்டு எதிர்த்தபடி குட்டிக் குட்டி பற்றைகளை விலக்கி பார்த்தவாறு தற்காலிக முகாமில் வசிக்கும் ஒரு பெண் வந்து கொண்டிருந்தார். எமது சனிக்கிழமை அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பு கூட்டத்திற்கு முகாமில் இருந்து வரும் அப் பெண் எம்மைக் கண்டதும் சிரித்தபடி வரவேற்றார்.

கொதி மணலில் வெறும் காலுடன் காற்றில் எதை தேடுகிறார் என்ற எமது கேள்விக்கு, "கிராம சேவகரிடம் கொடுப்பதற்காக நிரப்பி வைத்த ஒரு படிவம் கொட்டில் ஓலையை காற்று பிய்த்தெறிய அதனூடாக பறந்து விட்டது. எங்கு பறந்ததோ தெரியவில்லை. இன்னும் கிடைக்க வில்லை" என்றார். அவருடன் அவர் இருப்பிடத்திற்கு சென்றோம். சமைப்பதற்காக சேர்த்து இறக்கிய சின்ன குடிலுக்குள் வைத்திருந்த அவர் குடும்பத்து அலுமினிய சோற்றுப் பானை, கோப்பைகள், அரிதட்டு...., போன்றவை குடிலுக்குள் இருந்து காற்றுடன் வெளியில் பறந்து அங்கும் இங்குமாய் வீசப்பட்டுக் கிடந்தது. ஒரு சிறுமி அவற்றை ஓடி ஓடிப் பிறக்கி கொண்டிருந்தாள்.

ஓவென்ற மணல்வெளியில் ஒதுங்க ஒரு மரமும் இல்லை. அந்த தற்காலிக கூடாரம் மட்டுமே வெம்மை நிழலைத் தந்தது. அங்கிருந்து ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் அவர்கள் வாழ்ந்த உடைந்த குடியிருப்புக்களை நோக்கி சென்றோம். அது கடற்கரை ஓரத்தில் இருந்தது. அவ்வூருக்கு செல்லும் பாதை பள்ளமும், பள்ளத்தில் நிரம்பிய மணலுடன் கூடிய கிறவல் பாதை. உடைந்து பள்ளமும் குழிகளுமாய் கிறவல் மணலாகி கிறவல் வீதி என்னும் பெயரைக் கொண்டு நீண்டு கிடந்தது, கடல் அருகே உள்ள ஊருக்குச் செல்லும் அந்தப் பாதை. தனிமையில் செல்பவர்களின் மனதில் திகிலை மூட்டும் பற்றைக்காடுகள், பதையின் இரு மருங்கிலும் தொடர்ந்து வந்தது. ஒரு வளைவில் இருந்து மாணவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். பரீட்சைக் காலம் ஆதலால், அவர்கள் கையில் இருந்த பைல் (File...) பட்டமாகிப் பறக்கத் துடித்தது. எம்முடன் கூட வந்த சிறுவனிடம் பாடசாலை எங்குள்ளது என்று கேட்டோம். தாங்கள் தற்போது இருக்கும் இடத்தில் இருந்து அதிக தூரத்தில் இருப்பதாகவும் நடந்து செல்வது மிகவும் கஸ்டம் என்றும் கூறினான்.

இப்பிள்ளைகளுக்கு பாடசாலைக்கு செல்ல எந்த வித வாகன வசதியும் இல்லை. நடந்து செல்வதால் பாடசாலைக்கு செல்வதை அனேக சிறுவர்கள் வெறுத்தார்கள். தற்போது அம்மக்களை கொண்டே துப்பரவாக்கும் வேலை நடைபெறுவதால் அங்கு சம்பளத்திற்கு வேலை செய்யும் தம் தாய் தகப்பனுக்கு பகல் சாப்பாடு கொண்டு போவது சமைப்பது, போன்றவற்றை காரணமாகக் காட்டியும் பல பள்ளி மாணவர்கள் வீட்டில் நிற்பதையும் கண்டோம்.

சுனாமியால் உடைந்த தமது ஊரை துப்பரவு செய்து கொண்டு பல பெண்கள் நின்றார்கள். கடல் இரச்சல், பலத்த காற்று, கடும் வெயில், உடைந்து சிதறிய கூரிய கழிவுகள் - கண்ணுக்குள் வீசி அடிக்கும் மணலும், தூசியும்... முடிவற்ற போராட்டத்தில் எதிர்நீச்சல் போடும் பெண்களை சந்தித்தபடி அவ்வூரைச் சேர்ந்த சகோதரியுடன் மணல் மூடிய கிறவல் பாதை வழியே திரும்பிக்கொண்டிருந் தோம். எம் முன்னால் சென்ற அவர் சைக்கிளில் ஓடி வந்தார் என்பதை விட அவர் அதை உறுட்டியே வந்தார் என்று சொல்லலாம்.

மீண்டும் அந்த 55 குடும்பங்களும் வாழும் குடியிருப்பை அடைந்தோம். மின்சார வசதி அற்ற புதிய குடியிருப்பில் இராப் பொழுதுகள் பயங்கரமாக கழிவதாக மக்கள் தெரிவித்தார்கள். மாலை ஏழு மணிக்குப் பிறகு பெண்கள் வெளியில் செல்வது ஆபத்தாக உள்ளது. ஆறறிவற்ற விஷப் பூச்சிகள் உட்பட விஷ எண்ணங்கொண்ட சில ஆண்களால் பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் தமது தற்காலிக இருப்பிடத்தை சுற்றி விளக்குகள் பொருத்த ஜெனரேற்றர் வசதியை ஏதாவது நிறுவனங்களிடம் இவர்கள் எதிர்பார்த்தார்கள். இவர்கள் பகல் பொழுதை கதிரவன் எரித்து ஒளியூட்டினாலும் மீண்டும் வரும் இராப் பொழுதின் இருளை அகற்றுவது யார்? பாதிக்கப்பட்ட மக்களுக்காய் சேவை செய்ய புதிதாய் தொண்டு நிறுவனங்கள் கொடி தூக்கி புறப்பட்டு, பறந்து திரியும் இவ் வேளையில் இவர்கள் இருப்பிடத்திலும், பறப்பவர்களில் சில்லுகள் பதிய வேண்டும் என்பதே இவ்வூர் மக்கள் ஆதங்கங்கள்!






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கரை... கரை சேர்க்குமா... ?




"பொம்பிளைகள் வெளி நாட்டு வேலைக்கு போகவே கூடாது".

இதுவே இப்பெண் தனது கதையை தொடரும் முன் தொடங்கிய வசனம். ஏன்... எதற்கு... என்னும் விடய ங்கள் வரவில்லை அனுப வத்தின் கசப்பு முத்தாப்பாய் பாய்ந்து வெளிவருகிறது.

"இங்கேயிருந்து 20.06.2003 அன்று பிளேனில் ஏறினோம். றியாத் ஏயா போர்ட்டில் விட்டாங்க. அங்க இறங்கினா கூட்டிப்போக என்ர எஜமான் (வீட்டுக்காரர்கள்) வரவில்லை. பின்ன எம்பசியில நின்றன். அங்க 24 மணிநேரம் தான் நிப்பாட்டு வாங்க. சாப்பாடும் இல்ல, தண்ணியும் இல்ல. கையில இருந்த தண்ணியும், விஸ்கட்டும் முடிஞ்சி போச்சு. இரவு எம்பசியில இருந்து கொஞ்சம் சாப்பாடு இரண்டு, மூன்று தட்டில் வைத்து கொணந்தாங்க. அது எல்லாருக்கும் கிடைக்கல்ல. 24 மணிநேரமும் முடிந்து விட்டது. என்னைப் பொறுப்பெடுக்க நான் வேலைக்குச் செல்லும் வீட்டுக் காரர்கள் வரல்ல. அதனால என்போல இருந்த நிறையப் பெண்களை எல்லாம் வேறு ஒரு இடத்திற்கு அனுப்பி வைச்சாங்க.

வாழ்க்கையில எப்பிடி எல்லாம் சீரழிய வேணுமோ அங்க போனா அத கண்கூடாக காணலாம், அனுபவிக்கலாம். அந்த இடத்துல நிக்கிறப்போ நான் சந்திச்ச மறக்க முடியாத கொடுமை ஒன்று, அங்க வீட்டில வேலைக் கொடுமை தாங்க முடியாத சின்னப் பெண்பிள்ள ஒன்று என்ர மகளின் வயசிருக்கும். வீட்ட விட்டு வெளியில ஓடி வந்திருக்கு, இடம், வலம் தெரியாம... நடு றோட்டுல அலைஞ்சிருக்கு, உதவி செய்வதாக கூறி பொலிஸ் வேன் ஒன்றில வந்தவங்க பிள்ளைய ஏற்றிக் கொண்டுபோய் சீரழிச்சிபோட்டு நான் நின்ற இடத்துல கொணந்து விட்டிருக்காங்க. பிள்ளைக்கு அதனால மனமும் உடலும் பாதிச்சிட்டு. அங்க இருந்த கொஞ்ச காலமும் அந்த பிள்ளைக்கு ஆதரவா இருந்தன். பிறகு நான் வேலை செய்ய வேண்டிய வீட்டுக்காரர்கள் வந்து என்ன கூட்டிற்று பொயிட்டாங்க. பிள்ள என்ன ஆச்சுதோ தெரியல்ல. அத இப்ப நினைச்சாலும் கவலதான்...."

"நான் போன வீட்டில ஒரு கிழவனும் அவன் மனுசியும் அவங்கட மகனும் இருந்தாங்க. சரியான வேல. ஆனா வீட்டில அவங்க சமைப்பதும் சாப்பிடுவதும் குறைவு. விருந்தென்று அடிக்கடி வெளியில் போயிருவாங்க. அவங்க சாப்பிட்ட பழைய உணவு இருந்தா சாப்பிட தருவாங்க. இல்லாட்டி என்ர காசில வெளியிலதான் சாப்பாடு எடுக்கணும்.

கிழவனுக்கு என்னில ஒரு கண். என்ற உருவத்துக்கும், என்ர அதட்டலுக்கும் ஆனா பயம். என்றாலும் எந்த நேரமும் சுற்றி சுற்றி வருவான். குளிக்கும்போதும், உடைமாற்றும்போதும், வேணும் என்று கதவை தட்டுவான். அவனால வரும் வரையும் தொல்லை இருந்து வந்தது. அவன அதட்டி, ஏசி, பயங்காட்டி வந்த படியாதான் அவனிடமிருந்து என்னைக் காப்பாற்ற என்னால் முடிந்தது. நாடு திரும்பும் போது ஒரு சின்ன சாமானும் நான் வேலை செய்த வீட்டுக் காராக்கள் வாங்கி தரல்ல.

திரும்ப வெளியில போக அறவே விருப்பமில்ல. ஆனா..."

தன் குடும்பத்தை, தன் ஒரே மகளை, ஒரே மகனை படிப்பித்து நல்ல நிலைக்கு கொண்டு வரவேண்டும் என்று ஆசைப்பட்டே இப்பெண் வெளிநாடு சென்றாள். போகும் போது பிள்ளைகளை பார்ப்பதற்காக ஒரு விடுதியில் விட்டுச் சென்றாள். ஆனால் இவள் வெளிநாட்டில் இருந்த காலத்தில் 18 வயது நிரம்பாத அவள் மகள் ஒருவனை விரும்பி அவனுடன் சென்றுவிட்டாள். மகனும் திருமணம் முடித்துவிட்டான். மருமகனுக்கு 20 வயது பூரணமாக வில்லை. மகளுக்கு ஒரே அடியும் துன்புறுத்தலும். அதனால் அவனை விட்டு எம்மிடம் ஓடிவந்திருந்தாள் இவள் மகள். எமது ஏற்பாட்டில் ஓர் காப்பகத்தில் தாய் வரும்வரை விட்டிருந்தோம்.

தன் வாழ்வுக்காக, தொழில் தேடி வெளிநாடு போயும் அன்னிய நிலத்தில் நிம்மதியாய் கால் ஊன்றி தொழில் செய்ய முடியாத நிலை. உழைத்ததைக் கொண்டு சொந்த ஊரில் வேலை செய்யலாம் என இவள் இங்கு வரும்போது. இருந்த சுமை குட்டி போட்டு இவள் தோளில் ஏறக் காத்திருக்கிறது. தன் மனப் பாரத்துடன் மீண்டும் ஒரு பெண்ணாய் இந்நாளில் எம் முன் குந்தியிருக்கிறாள் இவள்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பால் நிலை அவதானிப்பு
## தை – சித்திரை 2005

*மட்டக்களப்பில் வேலை செய்து கொண்டிருக்கும் கிட்டத்தட்ட ௨௦ உள்ளூர் சர்வதேச நிறுவனங்களை கொண்டதாக மட்டக்களப்பு பெண்கள் கூட்டமைப்பு உள்ளது. இக் கூட்டமைப்பின் தை தொடக்கம் சித்திரை வரை பெறப்பட்ட பால் நிலை அவதானிப்பு விடயங்களின் தொகுப்பு அறிக்கையில் உள்ளடங்கும் அம்சங்களிலிருந்து குறிப்புகள் கீழே தரப்படுகின்றது.*

பால்நிலை அவதானிப்பு அறிக்கை என்பது சுனாமியினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் உரிமை தொடர்பாக எச்சரிக்கும் ஒரு அறிக்கையாகும். இது முக்கியமாக பெண்களை உள்ளடக்கியது.

இந்த பால்நிலை அவதானிப்பு எல்லா விடயங்களையும் உள்ளடக்கவில்லை. அது குறிப்பிட்ட சில உண்மைச் சம்பவங்களை மட்டும் உள்ளடக்குகின்றது.

**1. வீட்டு வன்முறை:**

முடிவடைந்த 4 மாத காலத்திற்குள் 17 அறிக்கைகள் வீட்டு வன்முறை தொடர்பாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள முகாமிலிருந்து கிடைத்துள்ளன.

**சில பிரச்சினைகள்:** மதுபாவனை துஷ்பிரயோகத்துடன் தொடர்புடையது. ஏனையவை சரியான முறையில் உணவு, நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கப்படாமையினால் குடும்பங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளும் வன்முறைகளுமாகும். இதில் ஒரு அறிக்கை வீட்டு வன்முறையால் மரணமடைந்ததுடன் தொடர்புபட்டது.

**2. பாலியல் வன்முறை:**

பாலியல் வல்லுறவு தொடர்பான ஒரு அறிக்கை.

**3. பாதிக்கப்பட்ட சமூகத்தினர் மீதான பொதுவான வன்முறைகள்:**

**4. அரசாங்க அதிகாரிகளுக்கும், அரசாங்க கொள்கைகளுக்கும் எதிரான முறைப்பாடுகள்:**

முடிவடைந்த 4 மாத காலத்திற்குள் 14 அறிக்கைகள் கிராம சேவையாளருக்கு எதிரானவை. சில பிரச்சினைகள் பாடசாலையிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட சமூகத்தினரின் குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியது. மக்களுக்கு நிவாரண அட்டை விநியோகிக்கப்படவில்லை. குடும்பங்கள் பதிவு செய்யப்படவில்லை. பெண்களுக்கு நிவாரணப் பணம் கொடுக்கப் படவில்லை. பெண்களுக்கு எதிராக உபயோகிக்கப்பட்ட தவறான வார்த்தைப்பிரயோகம்.

**5. இடம் பெயரும் சமூகத்துடன் தொடர்பான தீர்மானம் எடுக்கும் விடயம்:**

இரண்டு விடயங்கள் பெண்களின் பிரதிநிதிகளுக்கு எதிரான முகாம் குழுவினர் பற்றியதாகும். அத்துடன் ஒரு விடயம் முகாமுக்குள் பெண்களின் பழக்கவழக்கம், நடத்தை என்பவற்றுடன் தொடர்பு பட்டது. மூன்று விடயங்களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது.

**6. முகாம்களில் சுகாதாரப் பிரச்சினைகள்:**
(சுகாதாரம் - உடல் நலப்பிரச்சினைகள், மலசலகூடம் இல்லை)

குடும்ப சுகாதாரப் பிரச்சினை. தூசியினால் ஏற்பட்ட அஸ்மா நோய், மலசலகூட வசதியில்லாமை. கான்களில் கழிவு நீர் தேங்கி நிற்றல். மழைபெய்யும் நேரங்களில் மழைநீர் கூடாரத்தின் உட்பகுதிக்குள் வருகின்றது.

**7. முகாம்களில் உள்ள இளம் வயது திருமண ஜோடிகள்:**

சுனாமிக்கு பின்னர் ஒரு முகாமில் தனியே 17 ஜோடிகள் திருமணம் முடித்துள்ளனர். அதில் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உள்ளூர் நிறுவனம் ஒன்று திருமணப்பதிவுகளை செய்ய உதவியுள்ளது.

**8. சமூகத்தினர் சம்பந்தப்பட்ட இடம்பெயர்வு:**

முடிவடைந்த 4 மாத காலத்திற்குள் 6 அறிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அதில் பாடசாலைகளிலிருந்தும் ஏனைய கட்டிடங்களில் இருந்தும், முகாம்களில் இருந்தும் வெளியேறுமாறு அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

**9. தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமை:**


நேரடி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனாலும் தீர்மானம் மேற்கொள்பவர்களிடம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது.

**10. முகாமில் பற்றாக்குறையாகவுள்ள பாதுகாப்பிடம்:**

பெண்கள் குளிப்பதற்கான தனியான இடவசதி இல்லை. யூ.என்.எச்.சி. ஆர், கெயார் (UNHCR, CARE) நிறுவனங்கள் இணைந்து பெண்கள் குளிப்பதற்கென மறைப்பிடம் கட்டிக் கொடுத்துள்ளது. முகாம் சூழலில் நீடித்து வரும் ஒன்றாக இப்பிரச்சனை உள்ளது

**11. சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஆண்கள்:**

சுனாமியினால் குடும்பத்தை இழந்துள்ள ஆண்கள் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளனர். 2 சம்பவங்கள் இது போன்று காணப்படுகின்றது. 3






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடயங்கள் குடும்ப பராமரிப்பு தொடர்பானது. மனைவி இறந்துள்ளார். குழந்தைதந்தையாரிடம் உள்ளது. மனைவியின் குடும்பத்தினர் குழந்தையினை வளர்ப்பதற்கு கேட்டு சண்டை பிடிக்கின்றனர்.

**12. பாதிக்கப்பட்டுள்ள பெண்கள்:**

குடும்பத்தை இழந்து தனியாக இருக்கும் இளம் பெண்கள் பற்றியதாகும். அவர்களுக்கு வாழ்வாதார ஆதரவு, அரசாங்கத்தின் பாதுகாப்பு கொள்கை பற்றிய தகவல்கள் தேவையாக உள்ளது. ஒரு அறிக்கை வயது போன (75 வயது) பெண்பற்றியது. சுனாமி யினால் அனைத்தையும் இழந்துள்ளார். நிவாரணங்கள் எதனையும் பெற அனுமதிக்கப்படவில்லை. கிராம சேவையாளரினால் பதிவுசெய்யப் படவில்லை. தற்போது அவர் பிச்சை எடுக்கின்றார். மேலும் ஒரு அறிக்கை ஆதரவற்று முகாமில் தனியாக இருக்கும் பெண்பற்றியதாகும்.

**13. உளப் பாதிப்பு:**

சுனாமியின் போது மனநிலை பாதிக்கப் பட்டுள்ள அறிக்கைகள் 2 உள்ளன. அதில் ஒரு அறிக்கை சுனாமிக்கு பயப்படும் தனியாகவுள்ள பெண்பற்றியதும் சமூகம் பற்றியதுமாகும்.

**14. பெண்களுக்கு தேவைப்படும் வாழ்வாதாரம்/ ஜீவனோபாயம்:**

4 மாத காலத்திற்குள் 3 அறிக்கைகள் மூன்று சமூகத்தை சேர்ந்த பெண்களுக்கும் உடனடியாக தேவைப்படும் வாழ்வாதாரம் பற்றியவையாகும்.

**15. முகாம்களில் உள்ள கர்ப்பினிப் பெண்கள்:**

முகாம் சூழலில் சுகாதார வசதி, பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் பிள்ளைப் பேற்றுக்கான இடவசதி செய்து தரும்படி 2 பெண்கள் கேட்டுள்ளனர்.

**16. மீள்குடியமர்வும் பெண்களுடன் தொடர்பான சொத்து பிரச்சினை:**

சுனாமிக்குப் பின்னர் 4 அறிக்கைகள் மீள்குடியமர்வு, பெண்களின் சொத்து உரிமை தொடர்பான பிரச்சினைகளை உள்ளடக்கியது.

**17. முரண்பாட்டுடன் தொடர்பு பட்ட / மீள் இடம்பெயர்ந்த பகுதியில் உள்ள மிதி வெடி:**

மீள் இடப்பெயர்ந்துள்ள பகுதியில் கண்டுபிடிக் கப்பட்ட மிதிவெடி தொடர்பாக ஒரு அறிக்கை உள்ளது.

*** தொடரப்பட்ட நடவடிக்கைகள்:**

அதிகமான விடயங்கள் பெண்கள் கூட்டமைப்பு, மனித உரிமைகள் ஆணைக்குழு, அத்துடன் தனியார் நிறுவனங்கள் போன்றவற்றினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவைகளாகும்.எப்படியாவது சில விடயங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க முக்கியமான புதிய நடவடிக்கைகள் தேவையாகவுள்ளன.

**மண்முனை பிரதேச முகாம்களில் உள்ள சுத்தம் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள்:**

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பாக அனேக தடவைகள் நீர் சுகாதாரம் தொடர்பான பணிக் குழுவிடம் கூறப்பட்டுள்ளது. அத்துடன் மாநகரசபை/ GA/CEA/ WATSAN போன்றவற்றுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அடுத்த கட்ட நடவடிக்கை? மண்முனை வடக்கு பிரதேச முகாமில் உள்ள வீட்டுத் தலைமைத்துவம் வகிக்கும் பெண்களுக்கு வாழ்வாதார/ ஜீவனோபாய உதவி தேவையாகவுள்ளது:

வாடகைக்கு வசித்து வந்த மக்களுக்கு சட்டப்படியான குடியமர்வு உதவி தேவைப்படுகின்றது. தற்போது முகாமில் உள்ளனர்.

## கடலே...

தாயே
அணைத்தாய்
அரவணைத்தாய்
ஆளாக்கினாய்!
உன்னுடன் விடுமுறையை
விருப்புடன் கழித்தோம்!
எம் பிள்ளைகளையும்
விளையாட இடம்கொடுத்த நீ
ஆழிப் பேரலையாய் வந்து
அழித்தாயே!
பல உறவுகளை
பிரித்தாயே!
இன்று நாம் அழுகின்றோம்!
யார் வந்து
ஆறுதல் சொன்னாலும்
இழந்த எம் உறவுகள்
மீண்டும் வருமா...?
எம் கதறல் சத்தம்
உனக்கு கேட்கின்றதா...?
நீயும் தாய் தான் என்று
நினைத்து இருந்தோம்
ஏமாற்றிவிட்டாயே!

- அனித்தா ஆனந்தகுமார்


**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

இல.20, டயஸ்லேன்,

மட்டக்களப்பு.

தொ.பேசி - 065-2223297


முகவரி. ..............................
..............................
..............................
..............................
..............................

Issn No. 1391-6130



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்